அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

ஹேவிளம்பி ஆண்டு வைகாசி - ஆனி ஜூலை 2017 முரசு 10 ஒலி 121



**அருள் பூரண சித்தி யோகம் (1 நாள் தியான முகாம்) மற்றும் மாத வழிபாட்டின் அழைப்பிதழ்கள் உள்ளே...**

பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

நமது தருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற **வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு** மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றின் தகவல்களை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

**ஆண்டு சந்தா ரூ.120**

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களும் இந்த ஞான கருத்துக்களை அறிய அவர்களையும் சந்தாதாரராக்கி பயனடையச் செய்யுங்கள். *5 வருட சந்தா ரூ.600/-* தொடர்புக்கு: **8012680865**

*www.vallalarmission.org*
*vallalartrust@gmail.com*
*www.facebook.com/vallalarmission*
*Vallalarmission. Cell no: +91 99427 76351*





# கோசாலை


அன்பு உள்ளங்களே!



உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

**பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்**
**கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.**

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**



# திருச்செவிக்கு விண்ணப்பம்

அண்டபிண்ட முதலிய எல்லாவற்றிற்கும் அகத்தும் புறத்தும் நிறைந்து விளங்குகின்ற அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெரும் பதியாய பூரணரே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை யுண்மைத்தரத்தை அறிதல்வேண்டும் என்றும், இயற்கைப் பெருங்கருணைப் பெருந்தன்மையைக் கருதுதல் வேண்டுமென்றும், இயற்கைப் பெருங்குணப் பெரும்புகழைத் துதித்தல் வேண்டுமென்றும், எனது உள்ளகத்தே ஓவாதுறைந் தூற்றெழுந்து விரைந்து விரைந்து மேன்மேற் பெருகுகின்ற பேராசைப் பெருவெள்ளம் அணைகடந்து செல்கின்றது ஆகலின், 'அறிவாரறிகின்ற வண்ணங்களும், கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் ஆகிய எல்லா வண்ணங்களையும் உடையவர் அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங்கடவுள்' என்ற சத்திய ஞானிகளது உண்மை வாசகத்தைப் பற்றுக்கோடாக் கொண்டு, தன்மைசாலாத் தமியேன் அறிதற்கும் கருதுதற்கும் துதித்தற்குந் தொடங்கினேன்.

இங்ஙனந் தொடங்குதற்கு முன்னர், எனதறிவிற்கும் கருத்திற்கும் நாவிற்கும் இயல்வனவாகத் தோற்றிய வண்ணங்களுள் ஒன்றேனும் ஈண்டு இயற்படத் தோற்றாமையின், அருட்பெருஞ்ஜோதித் தனிப்பெருங் கடவுளே! தேவரீர் திருவருட் சமுகத்தின் இயற்கை வண்ணங்கள், எத்தன்மையவோ! எத்தன்மையவோ! வென்று உணர்ந்து உணர்ந்து கருதிக்கருதி உரைத்துரைத்து அதிசயிக்கின்றவனானேன்.

இயற்கை உண்மைத் தனிப்பெரும் பொருளாயும் இயற்கை விளக்கத் தனிப்பெரும் பதமாயும் இயற்கையின்பத் தனிப்பெருஞ் சுகமாயும் பிரிவின்றி நிறைந்த பெருந்தன்மையராய அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரே! தேவரீர் திருவருள் வலத்தால் பொறி, புலன், கரண முதலிய தத்துவங்கள் அனைத்தையும் வென்று நின்மலராகித் தத்துவாந்தத்தில் நின்று தம்முண்மை யுணர்ந்து இயற்கை உணர்ச்சியைப் பெற்று இயற்கையுண்மைக்கண் இயற்கை இன்பானுபவஞ் செய்கின்ற சுத்த யோகாந்தர்களும், சுத்த கலாந்தர்களும், சுத்த போதாந்தர்களும், சுத்த நாதாந்தர்களும், சுத்த வேதாந்தர்களும், சுத்த சித்தாந்தர்களுமாகிய சுத்த சன்மார்க்க ஞானிகளின் திருக்கூட்டங்களை நன் முயற்சியாற் றனித்தனி யடைந்து பத்தியாற் பணிந்து அற்புதப் பெருஞ் செயல் புரிகின்ற ஐயர்களே! அருட்பெருஞ்ஜோதித் தனிப் பெரும் பதியாய கடவுளின் இயற்கைத் திருவருட் சமுகம் இருந்த வண்ணம் உள்ளம் உவந்துரைத் தருளல் வேண்டும்.

- திருஅருட்பா வசனபாகம்

# அகவை பன்னிரண்டும் எழுபத்திரண்டும்

தவத்திரு ஊரன் அடிகள்

வள்ளற்பெருமான் ஜோதி வழிபாட்டிற்காக வடலூரில் சத்தியஞானசபையை நிர்மானித்தார். அதன் வழிபாட்டிற்காக வகுத்த விதியில், ஞானசபைக்குள் பணி செய்யப் புகுவோர் பன்னிரண்டு (12) வயதிற்குட்பட்ட சிறுவர்களாகவாவது எழுப்பத்திரண்டு (72) வயதிற்கு மேற்பட்ட பெரியவர்களாகவாவது இருக்கவேண்டும் என்று வயதுத் தகுதி விதித்தார். மற்றும் சில ஒழுக்க தகுதிகளையும் விதித்தார். அவ்வாறு பெருமானாரால் விதிக்கப்பட்ட ஒழுக்கத் தகுதியை கீழ்வரும் ஞானசபை விளக்க விபவ பத்திரிக்கையில் காணலாம்.

## ஞானசபை விளக்க விபவ பத்திரிகை

அன்புடைய நம்மவர்களுக்கு வந்தனம்.

இன்று தொடங்கி சபைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை யென்றும் சாலைக்கு சமரச சுத்த சன்மார்க்க சத்திய தருமச்சாலை யென்றும் சங்கத்திற்கு சமரச சுத்த சன்மார்க்க சத்தியச் சங்கமென்றும் திருப்பெயர் வழங்குதல் வேண்டும்.

இன்று தொடங்கி அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரது அருட்பெருஞ்சித்தி வெளிப்படும் வரைக்கும் ஞானசபைக் குள்ளே தகரக் கண்ணாடி விளக்கு வைத்தல் வேண்டும். பித்தளை முதலியவற்றாற் செய்த குத்துவிளக்கு வேண்டாம், மேலேற்றுகிற குளோபு முதலிய விளக்குகளும் வேண்டாம். தகரக் கண்ணாடிவிளக்கு வைக்குங் காலத்தில், தகுதியுள்ள நம்மவர்கள் தேகசுத்தி கரணசுத்தி யுடையவர்களாய், திருவாயிற் படிப் புறத்திலிருந்து கொண்டு விளக்கேற்றி, பன்னிரண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவர் கையிற் கொடுத்தாவது எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியர் கையிற் கொடுத்தாவது, உட்புற வாயில்களுக்குச் சமீபங்களில் வைத்து வரச் செய்விக்க வேண்டும். நாலு நாளைக்கு ஒரு விசை காலையில் மேற்குறித்த சிறியரைக் கொண்டாயினும் பெரியரைக் கொண்டாயினும் உள்ளே தூசு துடைப்பிக்க வேண்டும். தூசு துடைக்கப் புகும்போது நீராடி சுத்த தேகத்தோடு கால்களில் வத்திரம் சுற்றிக் கொண்டு புகுந்து முட்டிக்கா லிட்டுக் கொண்டு தூசு துடைக்கச் செய்விக்க வேண்டும். விளக்கு வைக்கின்றபோதும் இங்ஙனமே செய்விக்க வேண்டும். விளக்கு வைத்தற்கும் தூசு துடைத்தற்கும் தொடங்குகின்ற பன்னிரெண்டு வயதிற்கு உட்பட்ட சிறுவரும் எழுபத்திரண்டு வயதிற்கு மேற்பட்ட பெரியரும் பொருள் இடம் போகம் முதலியவற்றில் சிறிதும் இச்சை இல்லாதவர்களாய் தெய்வ நினைப்புள்ளவர்களாய் அன்புடையவர்களா

யிருத்தல் வேண்டும். விளக்கு வைக்கும்போதும் தூசு துடைக்கும் போதும் நம்மவர்களில் நேர்ந்தவர்கள் புறத்தில் நின்று பரிசுத்தராய் மெல்லெனத் துதி செய்தல் வேண்டும். யாவரும் யாதொரு காரியம் குறித்தும் தற்காலம் உள்ளே போதல் கூடாது. ஞானசபைத் திறவுகோல் ஒருவர் கையிலும் வெளிப்பட விருக்கப்படாது. அத் திறவுகோலை வேறொரு பெட்டிக்குள் வைத்து அப்பெட்டியைப் பூட்டி அப்பெட்டியைப் பொற்சபைக்குள் வைத்து அப் பெட்டித் திறவுகோலை ஆஸ்தானக் காவல் உத்தரவாதியா யிருக்கின்றவர் கையில் ஒப்புவித்தல் வேண்டும்.

தொடர்ச்சி காலம் நேரும் தருணம் எழுதுகிறேன்.

*12 - 72* என்று வயது வரம்பு விதிக்கக் காரணம் என்ன வென்று எமது இளமையில் பல காலம் ஆராய்ந்தோம். நீண்ட ஆய்வுக்குப் பின் இறுதியில் ஒரு திருமந்திரப் பாடலால் *12 - 72* என்பதன் விளக்கம் கிடைத்தது. அவ்வருமைத் திருமந்திரம் இதுதான்.

**முட்டை பிறந்தது முந்நூறு நாளினில்**
**இட்டது தானிலை ஏதேனும் ஏழைகாள்**
**பட்டது பார்மணம் பன்னிரண் டாண்டினில்**
**கெட்ட தெழுபதிற் கேடறியீரே. – திருமந்திரம் 163**

(முட்டை – உடம்பு; முந்நூறு நாள் – பத்துமாதம்; பார்மணம் – உலக வாசனை)

| | |
|---|---|
| முட்டை பிறந்தது | - பத்து மாதத்தில் உயிரோடு முந்நூறு நாளினில் கூடிய உடம்பு பிறந்தது |
| இட்டதுதான் இலை | - முட்டைகளைப் பறவைகள் இடுவது போன்று இவ்வுடம்பாகிய முட்டையை எதுவும் (யாரும்) இடவில்லை. |
| ஏழைகாள் | - அறிவால் ஏழைகளே |
| பட்டது பார்மணம் பன்னிரண்டாண்டினில் | - பன்னிரண்டாம் ஆண்டில் பார்மணம் - உலக வாசனை பட்டது - தொடங்கிற்று |
| கெட்டது எழுபதில் | - எழுபதாம் ஆண்டில் நீங்கிற்று. |

உலக வாசனை 12 இல் பட்டது. 70 இல் கெட்டது. பன்னிரண்டாம் வயதில் தொடங்கிற்று; எழுபதாம் வயதில் நீங்கிற்று.

பன்னிரண்டு ஆண்டிற்கு உட்பட்டவர்கள் உலக வாசனையை அறியாதவர்கள். எழுபது (எழுபத்திரண்டு) ஆண்டிற்கு மேற்பட்டவர்கள் உலக வாசனைக்குரிய பருவத்தைக் கடந்தவர்கள். உலக வாசனை (காம

*இச்சை)க்குரிய பருவம் வராதவர்களோ அல்லது அப்பருவத்தைக் கடந்தவர்களோ தான் ஞானசபைப் பணிக்கு உட்புகுதல் வேண்டும் என்பது வள்ளற் பெருமான் கருத்து எனத் தெளிவாயிற்று.*

*உலக வாசனை கெடும் பருவம் எழுபது என்று திருமூலர் கூற, வள்ளலார் எழுப்பத்திரண்டு என்று சொல்வதேன் என்பதையும் சிந்திக்க வேண்டும். வள்ளலார் எதையும் நுட்பதிட்பமாகக் கூறுவர். முட்டை பிறந்தது முந்நூறு நாளினில் (10 மாதத்தில்) என்று திருமூலர் ஒரு கர்ப்ப காலத்தைக் குறிக்கிறார். ஆனால் வள்ளற்பெருமான் தம் கர்ப்பவாச காலத்தைக் கூறும் முறை மிகவும் வியப்புக்குரியது.*

> **“எல்லாமாகிய இயற்கை இன்பக் கடவுளே! தந்தை என்பவனது சுக்கிலப்பையின்கண் யான் வந்தமைந்த கணப் போது தொடங்கி, தாய் என்பாளது சோனிதப் பையின்கண் சென்றடைந்த கணப்போதிற்கு முன் கணப்போது வரையுமாக என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஒருகோடி ஒன்பது லக்ஷத்து அறுபதினாயிரம் கணப்போது பரியந்தம்... தாய் என்பவளது சோனிதப் பையின்கண் யான் வந்தமைத்த கணப்போது தொடங்கி இவ்வுலகில் தோன்றிய கணப்போதிற்கு முன்கணப்போது வரையுமாக என்னால் ஒருவாறு அளவிடப்பட்ட ஆறுகோடி நாற்பத்தெட்டு லக்ஷங் கணப்போது பரியந்தம்”...** *என்று தம் கர்ப்ப வாசகாலத்தைக் குறிப்பிடுகிறார்.*

*தந்தையின் கருவில் தான் இருந்த இரண்டு மாதத்தை 1.09,60,000 (ஒரு கோடி ஒன்பது லட்சத்து அறுபதாயிரம்) கணப்போது என்றும் தாயின் கர்ப்பத்தில் தானிருந்த பத்து மாதத்தை 6,48,00,000 (ஆறு கோடி நாற்பத்தெட்டு லட்சம்) கணப்போது என்றும் வள்ளற்பெருமான் நுட்பமாகக் (மிகத் துல்லியமாக) கணக்கிட்டுரைப்பது மிகவும் அருமைப்பாடுடையதாகும்.*

*இவ்வாறு நுட்பதிட்பமாக எதனையும் கணக்கிடும் வள்ளற்பெருமான் திருமூலர் எழுபது எனக் கூறியதை, எழுபத்திரண்டு எனக் கணக்கிடுகிறார் என்று கொள்ளலாம். எழுப்பத்திரண்டு, பன்னிரண்டின் மடங்காக (6 X 12 = 72) இருப்பதைக் காணலாம். மக்கட்கு வயது 100 என்பது பொது. 120 என்று ஒரு (சிறப்புக்) கணக்கும் உண்டு. 120 இல் பாதி 60, அரை ஆயுள் 5 X 12= 60, மணி விழாக் காலம். 6 X 12 = 72 உலக வாசனை நீங்கும் காலம். 10 X 12 = 120 முழுமை நிறை ஆயுள். இப்படியும் கருதலாம்.*

*70 இல் உலக வாசனை கெடுகிறது என்ற பொதுவான கொள்கையின் அடிப்படையில்தான் 70 ஆம் ஆண்டு நிறைவைப் பீமரத சாந்தி எனக் கொண்டாடுகின்றனர் போலும். 70 இல் பீமரத சாந்தி என்ற வைதிகமரபைப் பலரும் அறிவர். 70 இல் உலக வாசனை நீங்குகிறது என்ற தத்துவ உண்மையை எத்தனை பேர் அறிவர்? வள்ளற் பெருமான் அதனையும் நுட்பமாகக் கணக்கிட்டு 72 என்று கொண்டு 12*

வயதுக்குள், 72 வயதுக்கு மேல் என்ற வரம்பை ஞானசபைப் பணிக்கு விதித்திருக்கிறார். நம் வள்ளல் பெருமானாரின் ஆன்மிக அனுபவமும் அதன் அறிவியலிலும் அவருக்கு நிகர் அவரே என்பது யாவரும் அறிந்ததே. மேலும், இதனை அவர் வகுத்தருளிய சத்திய ஞானசபையின் மூலமும் அதன் வழிபாட்டு விதிமுறைகளின் மூலமும் அனைவரும் எளிதில் உணரலாம்.

திருச்சிற்றம்பலம்

# மூத்தோர்சொல் அமிர்தம்

மக்கள் இருபாலர்; ஒருபாலர் அறிவை சேகரிப்பதில் பொழுதைச் செலவழிக்கின்றார்கள்; மறுபாலர் பொருளை சேகரிப்பதில் பொழுதைச் செலவழிக்கின்றார்கள். பொருளை சேகரிக்கின்றவர்கள்தான் பெருவாரியான எண்ணிக்கையில் உள்ளவர்கள்.

பொருளை சேகரிப்பதில் எந்தச் சிக்கலும் இல்லை. ஏனென்றால் பொருள் எது என்பது நமக்குத் தெரியும். அறிவைச் சேகரிப்பதில் சிக்கல் இருக்கிறது. ஏனென்றால் எது அறிவு என்பதை அடையாளம் காண்பதில் நமக்குத் தடை இருக்கிறது.

பொருள் யாருக்கு வேண்டுமானாலும் வரும். தேடியவர்களுக்கும் வரும். தேடாதவர்களுக்கும் வரும். பொருளைச் சேகரிக்கத் தகுதியுடையவர்கள்தாம் பொருளைச் சேகரிக்க முடியும் என்ற வரையறைகளெல்லாம் கிடையாது. ஆனால் அறிவைச் சேகரிக்க வேண்டுமானால் அதற்குத் தவம் வேண்டும். அறிவை நோக்கிய தவம் மற்றும் தாகம் இருக்க வேண்டும்.

அறிவு என்பது வெறும் தகவல் சேகரிப்பில்லை. நான் கேட்கிற கேள்விகளுக்கெல்லாம் உங்களுக்கு விடை தெரியுமானால் நீங்களும் வெல்லலாம் ஒன்றே முக்கால் ரூபாய் என்று விளையாடப்படுகிற வினாடி வினாத் தகவல் சேகரிப்புகள் அறிவாகாது.

சினிமா நட்சத்திரத்தின் திருமணத்திற்கு யார் யார் வந்திருந்தார்கள்? அங்கே என்ன உணவு வகைகள் பரிமாறப்பட்டன? என்பன போன்றவற்றைத் தெரிந்து வைத்திருப்பதை நீங்கள் அறிவு என்று சொல்வீர்களா?

என்னை எனக்கு காட்டுகின்ற அறிவுதான் அறிவு. என்னுடைய ஆற்றலின் அளவுகளை நான் தெரிந்துகொள்வது தான் அறிவு. வேறு எதை அறிவதும் எனக்கு ஒரு செய்தியாக இருக்கமுடியுமே ஒழிய அறிவாக இருக்க முடியாது.

ஆகவே தன்னை அறியும் அறிவே அறிவு; பின்னை

*அறிவெல்லாம் பேயறிவு. யாருக்கு இந்த அறிவு கைவசப்படும்? முயல்கிறவர்கள் எல்லோருக்கும் அறிவு கைவசப்படும்!*

*அறிவு கைவசமாவதைப்பற்றி நாலடியாரில் ஒரு பாட்டு வருகிறது:*

**பாலால் கழீஇ பலநாள் உணக்கினும்**
**வாலிதாம் தன்மை இருந்தைக்கு இருந்தன்று**
**கோலால் கடாஅய்க் குறினும் புகல்ஒல்லா**
**நோலா உடம்பிற்கு அறிவு.**

*அடுப்புக் கரியைப் பாலில் ஊறவைத்து, பின் அதைக் காயவைத்து, பின் மீண்டும் பாலில் ஊறவைத்து, பின் மீண்டும் அதைக் காயவைத்தாலும் பாலின் வெண்மை கரிக்கு ஏறாது. அதைப்போல அறிவை அடையவேண்டும் என்கிற முயற்சி இல்லாதவனை ஒருக்களித்துப் படுக்கப்போட்டு அவன் காதுவழியாக அறிவைக் குச்சி வைத்துக் குத்திச் செலுத்தினாலும் அறிவு அவனுக்குள் இறங்காது.*

*அக்பருக்கு பீர்பால் என்ற அமைச்சர் இருந்தார். மிகவும் அறிவாளி. இந்த பீர்பாலுக்கு ஒரு வேலைக்காரன் இருந்தான். அவன் மகா முட்டாள். எதையும் விளங்கிக்கொள்கிற, கற்றுக் கொள்கிற முயற்சியில்லாதவன்.*

*ஒருநாள் பீர்பால் தன்னுடைய வேலைக்காரனைக் கூப்பிட்டு 'எண்ணெய் வாங்கிக்கொண்டு வா' என்று அனுப்பினார். இவனும் ஒரு கிண்ணத்தை எடுத்துக்கொண்டு எண்ணெய் வாங்கப் போனான். அந்தக் கிண்ணம் இரண்டு பக்கங்களிலும் குழிவு உள்ள கிண்ணம். ஆகவே அதன் கொள்ளளவு குறைவு. கடைக்குப் போன வேலைக்காரன் காசைக் கொடுத்து எண்ணெய் கேட்டான். கடைக்காரனும் எண்ணெய்யைக் கிண்ணத்தில் ஊற்றினான். கிண்ணம் நிறைந்துவிட்டது. ஆனால் வாங்க வேண்டிய எண்ணெய் இன்னும் மிச்சமிருந்தது. கடைக்காரன் 'வேறு கிண்ணம் வைத்திருக்கிறாயா?' என்று கேட்டான். வேலைக்காரன் 'இந்தக் கிண்ணத்தின் மறுப்புறத்திலேயே மற்றொரு கிண்ணம் இருக்கிறது. அதில் ஊற்றுங்கள்' என்று கையில் வைத்திருந்த எண்ணெய்க் கிண்ணத்தைக் கவிழ்த்து அதன் மறுபுறத்தைக் காட்டிக் கிண்ணத்தின்*



*வெளிக்குழிவில் எண்ணெய்யை வாங்கினான். நடக்கும்போது எண்ணெய் கொட்டிப்போய்விடாமல் கிண்ணத்தைக் கவனமாகப் பற்றிக் கொண்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான். பீர்பாலிடம் கொண்டு போய் எண்ணெய்யைக் கொடுத்தான். பீர்பால் கேட்டார்: 'அவ்வளவு ரூபாய்க்கு இவ்வளவுதான் எண்ணெய் கொடுத்தானா கடைக்காரன்?'*

*வேலைக்காரன் சொன்னான்: '.இல்லை ஐயா! மிச்ச எண்ணெய் கிண்ணத்தின் மறுபுறத்தில் இருக்கிறது' என்று கிண்ணத்தைத் திருப்பினான். இந்தப் பக்கத்தில் இருந்த எண்ணெய்யும் கொட்டிப்போய்விட்டது.*

*அறிவை அடைய வேண்டும் என்கிற தாகமும் முயற்சியும் உள்ளவர்களுக்கு அறிவு தானே வந்து தலையளித்து ஆட்கொண்டு அருளும். அல்லாத பேர்களெல்லாம் மாலறியா நான் முகனும் காணா மலையினைப்போலத் தேடித் திரிந்துகொண்டே இருக்கவேண்டியதுதான்.*

---

*குற்றஞ் சொல்வதற்கு ஏதாவது வேண்டியிருக்கிறது நமக்கு. நலம் பாராட்டிக்கொண்டு மட்டுமே இருக்கிற மனிதர்கள் அரிதானவர்கள். மற்றவர்களின் குற்றங்களைப் பேசும்போதுதான் நம்முடைய இருப்பை நம்மால் நியாயப்படுத்திக்கொள்ள முடிகிறது. இல்லாவிட்டால் நம்முடைய இருப்பு பொக்கையானதாகத் தோன்றுகிறது.*


*தன்னை அடையாளங் கண்டு, தன்னுடைய நல்லியல்பைத் தளமாக்கி அதில் கால்பாவி நிற்க முடியாதவர்களெல்லாம் தாங்கள் நிலைகொள்வதற்குப் பிற பிடிமானங்களைத் தேடுகிறார்கள். பிடிமானமாக மற்றவர்களுடைய குற்றங்கள் அமைகின்றன. ஆகவே பிறரை நலம் பாராட்டாமல் குற்றம் பாராட்டுவது என்பது தன்னிறைவில்லாத ஒருவர் தன்னை நிலைநிறுத்திக் கொள்ளச் செய்யும் வேலை. மற்றவர்களை நலம் பாராட்டுவது என்பது அவர்களைத் தனக்குமேல் அனுமதிப்பதாகவும் அல்லவா ஆகிவிடும்?*

*ஓர் உணவுவிடுதியில் ஒரு வாடிக்கையாளன் நாள் தவறாமல் அந்த விடுதியில் சாப்பிடுவதை வழக்கமாக வைத்திருந்தான். அந்த விடுதியினரும் அவனைப் போற்றி அவன் விரும்புவதையெல்லாம் செய்வார்கள். ஏனென்றால் அவன் நீண்ட நாள் வாடிக்கையாளன். அவனுக்கு ரொட்டித் துண்டுகள் மிகவும் பிடிக்கும். ஒவ்வொரு நாளும் அவன் சாப்பிட வரும்போது சாப்பாட்டுடன் ரொட்டித் துண்டுகள் இருக்கவேண்டும்.*

*ஒருநாள் அவன் சாப்பிட வந்தான். சாப்பாட்டோடு அவனுக்குப்*

*பிடித்த ரொட்டித் துண்டு ஒன்றையும் வைத்திருந்தார்கள். அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. 'இதென்ன ஒரே ஒரு ரொட்டித் துண்டுதான் வைத்திருக்கிறீர்கள்?' என்று கேட்டான்.*

*உடனே அவனுக்கு இன்னும் கூடுதலான ரொட்டித் துண்டுகள் வழங்கப்பட்டன. 'பரவாயில்லை. ஆனால் இதுவும் போதுமான அளவில்லை. நான் நிறைய ரொட்டித் துண்டுகள் சாப்பிட விரும்புகிறேன்!' என்றான்.*



*அடுத்த நாள் அவன் சாப்பிட வந்தபோது முந்தைய நாளினும் அதிகமான ரொட்டித் துண்டுகள் வைக்கப்பட்டன. 'நேற்றைக்கு இன்று பரவாயில்லை. ஆனாலும் நீங்கள் கணக்குப் பார்த்துத்தான் வைக்கிறீர்கள்!' என்றான் அவன்.*

*அதற்கடுத்த நாள் அவன் சாப்பிட வந்தபோது ஒரு கூடை நிறைய ரொட்டித் துண்டுகள் அவனுக்கு வழங்கப்பட்டன. ஆனாலும் அவன் திருப்தியடையவில்லை. அந்த விடுதியின் மேலாளர் அவனை எப்படியாவது திருப்திப்படுத்தி விடவேண்டும் என்று கருதி மறுநாள் ஒரு மாபெரும் ரொட்டித்துண்டைச் செய்யச் சொல்லி, இரண்டு சாப்பாட்டு மேசைகளைச் சேர்த்துப் போட்டு, அந்த ரொட்டித்துண்டை நான்கைந்துபேராகச் சேர்த்து தூக்கிக்கொண்டுபோய் வைத்தார்கள். அதற்கு அவன் சொன்னான்: 'ஒரே ஒரு ரொட்டித் துண்டுதானே வைத்திருக்கிறீர்கள்? மறுபடியும் உங்கள் வேலையை ஆரம்பித்து விட்டீர்களா!'*

**இகழ்ந்ததும் பெற்றதும் ஈசன் அறியும்**
**உகந்தருள் செய்திடும் உத்தம நாதன்**
**கொழுந்தன்பு செய்தருள் கூரவல் லார்க்கு**
**மகிழ்ந்தன்பு செய்யும் அருளது வாமே**

*என்று பாடுகிறார் திருமூலர்.*

*குற்றஞ் சொல்லிப் பிறரை இகழ்ந்தும் அதனால் பெற்ற நிறைவும் உங்களாலும் அறியப்படும். நீங்கள் மற்றவர்களுக்கு எவ்வாறு செய்தீர்களோ அவ்வாறே உங்களுக்கும் செய்யப்படும். நீங்கள் எந்தக் காசில் விற்றீர்களோ அதே காசில் மறுபடியும் உங்களுக்கு அளிக்கப்படும்.*

**"பிறர் குற்றம் விசாரியாதிருத்தல். தன் குற்றம் விசாரித்தல்"– வள்ளலார்**

# தெய்வத் தீந்தமிழ்
# திருஅருட்பா



உண்ணஉண்ணத் தெவிட்டாதே தித்தித்தென் உடம்போ
டுயிர்உணர்வும் கலந்துகலந் துள்ளகத்தும் புறத்தும்
தண்ணியவண் ணம்பரவப் பொங்கிநிறைந் தாங்கே
ததும்பிஎன்றன் மயம்எல்லாம் தன்மயமே ஆக்கி
எண்ணியஎன் எண்ணமெலாம் எய்தஒளி வழங்கி
இலங்குகின்ற பேரருளாம் இன்னமுதத் திரளே
புண்ணியமே என்பெரிய பொருளேஎன் அரசே
புன்மொழிஎன் றிகழாதே புனைந்துமகிழ்ந் தருளே. 1

கண்களிக்கப் புகைசிறிதும் காட்டாதே புருவக்
கலைநடுவே விளங்குகின்ற கற்பூர விளக்கே
பண்களிக்கப் பாடுகின்ற பாட்டில்விளை சுகமே
பத்தருளே தித்திக்கப் பழுத்ததனிப் பழமே
மண்களிக்க வான்களிக்க மணந்தசிவ காம
வல்லிஎன மறைகளெலாம் வாழ்த்துகின்ற வாமப்
பெண்களிக்கப் பொதுநடஞ்செய் நடத்தரசே நினது
பெரும்புகழ்ச்சே வடிகளுக்கென் அரும்பும்அணிந் தருளே. 2


எவ்வகைத்தாந் தவஞ்செயினு எய்தரிதாந் தெய்வம்
எனக்கெளிதிற் கிடைத்ததென்மன மிடங்கொண்ட
அவ்வகைத்தாந் தெய்வமதற் கப்பாலாந் தெய்வம்
அப்பாலும் பெருவெளிக்கே அப்பாலாந் தெய்வம்
ஒவ்வகத்தே யொளியாகி யோங்குகின்ற தெய்வம்
ஒன்றான தெய்வமிக நன்றான தெய்வம்
செய்வகைத்தென் றறிஞரெலாஞ் சேர்பெரிய தெய்வம்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 3

சத்தியமாந் தனிந்தெய்வந் தடையறியாந் தெய்வம்
சத்திகளெல் லாம்விளங்கத் தானோங்குந் தெய்வம்
நித்தியதன் மயமாகி நின்றதெய்வ மெல்லா
நிலைகளுந்தன் னருள்வெளியில் நிலைக்கவைத்த தெய்வம்
பத்திவலைப் படுகின்ற தெய்வமெனக் கெல்லாப்
பரிசுமளித் தழியாத பதத்தில்வைத்த தெய்வம்
சித்தியெலாந் தருந்தெய்வஞ் சிந்தாந்தத் தெய்வம்த்
சிற்சபையில் விளங்குகின்ற தெய்வமதே தெய்வம். 4

திருச்சிற்றம்பலம்



# கடவுளின்பம்



கடவுளின்பம், இறைவனின் திருவடி நிழலின் இன்பம், எப்படி இருக்கும் என்று அப்பர் ஒரு பாடலிற் பாடுகிறார்.

**மாசில் வீணையும் மாலை மதியமும்**
**வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்**
**மூசு வண்டறை பொய்கையும் போன்றதே**
**ஈசன் எந்தை இணையடி நீழலே.**

*ஆறு காலங்களில் இளவேனிற் காலம் இனிய காலம், நம் பெரியோர்கள் ஓர் ஆண்டை ஆறுகாலப் பகுதிகளாகப் பிரித்தார்கள். ஒரு நாளையும் ஆறாகப் பிரித்தார்கள். ஆண்டின் ஆறு பிரிவுக்குப் பெரும் பொழுது என்று பெயர். நாளின் ஆறு பிரிவுக்குச் சிறு பொழுது என்று பெயர். இதுவும் ஆறு, அதுவும் ஆறு. அதனால் தான் நாள் தோறும் ஆறுகால வழிபாடு செய்ய வேண்டும் என்ற நியமத்தை வைத்தார்கள். வள்ளலாரும் ஆறுகால வழிபாட்டை வற்புறுத்துகிறார்.*

## பெரும்பொழுது ஆறு

| | |
|---|---|
| *சித்திரை, வைகாசி* | *- இளவேனிற்காலம், வசந்தருது* |
| *ஆனி, ஆடி* | *- முதுவேனிற்காலம், கிரீஷ்மருது* |
| *ஆவணி, புரட்டாசி* | *- கார்காலம், வர்ஷருது* |
| *ஐப்பசி, கார்த்திகை* | *- கூதிர்காலம், சரத்ருது* |
| *மார்கழி, தை* | *- முன்பனிக்காலம், ஹேமந்தருது* |
| *மாசி, பங்குனி* | *- பின்பனிக்காலம், சிசிரருது* |

*ஆறு காலங்களில் இளவேனிற் காலமே இனிய காலம். வசந்த காலம். கோயில்களில் ஆண்டுப் பெரு விழாக்கள் (பிரம்மோற்சவங்கள்) பெரும்பாலும் இளவேனிற் காலத்தில் நிகழ்வதே வழக்கம். வசந்தோற்சவம் என்றே பெயர் பெறும். ஓர் இளவேனிற் காலத்தில் தான், வசந்த காலத்தில் தான் வைகாசி 11 இல் வள்ளற்பெருமான் வடலூரில் சத்திய தருமச்சாலையை நிறுவியருளினார். வசந்தகாலம் வள்ளலாருக்கு உவப்பானகாலம்.*

*மாசில் வீணையும் மாலை மதியமும் என்ற அப்பர் பாடலிலும் இளவேனில் தான் சொல்லப்படுகிறது.*

*ஓர் இளவேனிற் காலம். அதுவும் சாதாரண இளவேனில் அன்று. வீங்கு இளவேனில் - தொடங்கி, முதுவேனிலை நோக்கி*

*முதிர்ந்துவரும் - வீங்கும் - இளவேனில். இளவேனிற் காலத்தில் ஒரு மாலை நேரம். இனிய இளவேனிற் காலத்து இன்பமாலை. மாலை மதியம். இரவு முன்னேரத்து நிலா. முன்னிலா, பின்னிலாவைவிட முன்னிலா இனிது. அதனால் தான் மாலை மதியம் என்றார். இளவேனிற் காலத்து இன்பமாலை. நிலா வெளிச்சம் வீசுவதோடு தென்றலும் வீசுகிறது. வீசு தென்றல். தெற்கிலிருந்து வீசும் காற்று தென்றல். வடக்கேயிருந்து வீசும் காற்று வடந்தை. கிழக்கிலிருந்து வீசும் காற்று கொண்டல். மேற்கிலிருந்து வீசும் காற்று மேல் காற்று. நால்வகைக் காற்றிலும் தென்றலே இனிது. தெற்குப் பார்த்த மனைக்கும் வீட்டுக்கும் மதிப்பு மிகுதி இதனால் தான். இதுவரை காலத்தைப் பற்றிய செய்திகள். இனி, இடம், பொய்கைக் கரை, அதுவும் தாமரைப் பொய்கை, தாமரை மலர்களில் வண்டுகள் மொய்க்கின்றன, ரீங்காரம் செய்கின்றன. மூசுவண்டறை பொய்கை. (மூசு - வண்டு - அறை பொய்கை) வண்டுகளின் ரீங்காரத்தோடு வீணை இசையும் சேர்ந்து கொள்ளுகிறது. மாசில் வீணை - குற்றமற்ற வீணை. நரம்புக் குற்றங்குறையில்லாத நல்ல வீணை.*

*மாசில் வீணை - மதியம் - வீசு தென்றல் - வீங்கு இளவேனில் - மூசு வண்டு அறை பொய்கை இத்தனையும் சேர்ந்த இன்பம் எப்படி இருக்கும். அப்படி இருக்குமோ ஈசன் எந்தை இணையடி நீழல் என்கிறார். நிழல் இயல்பாகவே குளிர்ந்திருக்கும். வெய்யிலருமை நிழலில் தெரியும் என்பார்கள். உலகியல் வெய்யிலில் வாடி வதங்கித் துன்புறும் நாம் இறைவன் தாள்நிழல் இன்பத்தை நோக்கிப் பயணஞ் செய்யவேண்டும். தாள்நிழல் சேர என்பதன் தத்துவம் இதுதான்.*

*வள்ளலாரும் இப்படி ஒரு பாடல் பாடுகிறார். புள்ளிருக்குவேளூர் வைத்தீசுவரன் கோயிலில் பாடிய வைத்தியநாதர் பதிகத்தின் ஈற்றுப் பாடல் 12 ஆம் பாட்டு.*

**இளவேனில் மாலையாய்க் குளிர்சோலை யாய்மலர்**
**இலஞ்சிபூம் பொய்கைஅருகாய்**
**ஏற்றசந் திரகாந்த மேடையாய் அதன்மேல்**
**இலங்குமர மியஅணையுமாய்த்**
**தளவேயும் மல்லிகைப் பந்தராய்ப் பால்போல்**
**தழைத்திடு நிலாக்காலமாய்த்**
**தனிஇளந் தென்றலாய் நிறைநரம் புளவீணை**
**தன்னிசைப் பாடல்இடமாய்**
**களவேக லந்தகற் புடையமட வரல்புடை**
**கலந்தநய வார்த்தைஉடனாய்க்**
**களிகொள இருந்தவர்கள் கண்டசுக நின்னடிக்**
**கழல்நிழற் சுகநிகருமே**

**வளவேலை சூழுலகு புகழ்கின்ற தவசிகா**
**மணிஉலக நாதவள்ளல்**
**மகிழவரு வேளூரில் அன்பர்பவ ரோகமற**
**வளர்வைத் தியநாதனே. – திருஅருட்பா**

*இளவேனில் மாலையை வள்ளலார் இதிலும் குறிப்பிடுகிறார். இளவேனில் மாலையாய் என்றே பாடலைத் தொடங்குகிறார். அப்பர் பாடலின் மூசு வண்டறை பொய்கை, வள்ளலார் பாடலில் மலர் இலஞ்சி பூம்பொய்கையாய் வருகிறது. அப்பரின் மாலை மதியம், இங்கு பால்போல் நிலாக் காலமாய் வருகிறது. அங்கே வீசிய வீசு தென்றல், இங்கே தனி இளந்தென்றலாய் வருகிறது. அப்பரின் மாசில் வீணை வள்ளலாரில் நிறை நரம்புள வீணை தன் இசைப் பாடலாய் வருகிறது. மாசில் வீணையும் என்ற அப்பர் பாடலை வள்ளலார் அறியாமலா இருந்திருப்பார். ஓதாதுணர்ந்த வள்ளற்பெருமான் முற்பிறப்புகளிலேயே அவற்றையெல்லாம் ஓதி உணர்ந்திருப்பார். இப்பிறப்பிலும் ஒரு கண்ணோட்டம் விட்டிருக்கலாம்.*

*வள்ளற் பெருமான் இடைக் காலத்தில் பாடிய பாட்டு இது. சற்றுப் பிற்காலத்தில் பாடிய பாட்டு ஒன்று உண்டு. கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகைகிடைத்த பாட்டு அது. அப்பாடலும் இங்கு ஒன்றாக வைத்து நோக்கத்தக்கது.*

**கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும்வகை கிடைத்த**
**குளிர்தருவே தருநிழலே நிழல்கனிந்த கனியே**
**ஓடையிலே ஊறுகின்ற தீஞ்சுவைத்தண் ணீரே**
**உகந்ததண்ணீர் இடைமலர்ந்த சுகந்தமண மலரே**
**மேடையிலே வீசுகின்ற மெல்லியபூங் காற்றே**
**மென்காற்றில் விளைசுகமே சுகத்தில்உறும் பயனே**
**ஆடையிலே எனைமணந்த மணவாளா பொதுவில்**
**ஆடுகின்ற அரசேஎன் அலங்கல்அணிந் தருளே.**

*ஆடல் அரசனின் திருவடி பெருமையையும் அதில் பெரும் இன்ப அனுபவத்தை பற்றியும் வள்ளல் பெருமானார் பல அருட்பா பாசுரங்களில் அருளியுள்ளார்கள். அப்பர் சுவாமிகள் அருளியுள்ள இறைவனின் தாள்நிழல் இன்பமானது அவரின் அனுபவ நிலையாம். இது நால்வகை மார்க்கங்களில் முதல் மார்க்கமான தாசமார்க்கத்தில் அடைகின்ற சாலோலம் எனப்படுகின்ற பதமுத்தியாகும். இறைவனை அரசனாகவும் தன்னை அடிமையாகவும் கருதி பக்தி செய்து அப்பர் சுவாமிகள் இறைபதம் எய்தியது பெரும்பேறாகும்.*

*நம் வள்ளல் பெருமானார் இறைவன் தன்னை ஏறாநிலைமிசை ஏற்றுவித்ததும் ஆராலும் அறியாத உயர்நிலை அடைந்ததையும் அருட்பா*

பாசுரங்களில் இயம்பியுள்ளார். என்னைப்போல் பேரருள் பெற்றவரும் எந்த உலகத்தில் யார் உள்ளார் என்று இறைவனையே வினவியுள்ளார்.

**நோவாது நோன்பெனைப்போல் நோற்றவரும் எஞ்ஞான்றும்**
**சாவா வரம்எனைப்போல் சார்ந்தவரும் – தேவாநின்**
**பேரருளை என்போலப் பெற்றவரும் எவ்வுலகில்**
**யார்உளர்நீ சற்றே அறை.**

இதற்கு இந்த அருட்பா பாசுரமே பெருஞ்சான்று. இருப்பினும் அப்பர் சுவாமிகள் இறை பதத்தின் இன்ப சுகத்தினை தீந்தமிழில் அருளியிருப்பதனால் கடவுள் இன்பத்தைப் பற்றி யாவரும் உணர்ந்துக் கொள்ள ஏதுவாய் உள்ளதென்பதில் ஐயமில்லை.

திருச்சிற்றம்பலம்

# திருமந்திர தேன்

**சத்தம் முதல் ஐந்தும் தன் வழித் தான் சாரின்**
**சித்துக்குச் சித்து அன்றிச் சேர்விடம் வேறு உண்டோ**
**சுத்த வெளியில், சுடரில் சுடர்சேரும்**
**அத்தம் இது குறித்து ஆண்டுகொள் அப்பிலே.**

*சுவை, ஒளி முதலிய தன்மாத்திரைகளை உள்ளிட்ட தத்துவங்களாகிய சடப்பொருள்கள், ஒடுங்கும் போது (ஊழிக் காலத்தில்) தத்தம் முதலாகிய சடப்பொருள்களில் ஒடுங்கி, முடிவில், எல்லாச் சடப்பொருள்களும் மாயையில் ஒடுங்கும். இவ்வாறு சடம் சடத்தைச் சேர்தலால், உயிராகிய சித்துப் பொருள், சித்துப் பொருளை யன்றி வேறு எதைச் சேரும்? ஆதலின், இறைவன் குருவாக எழுந்தருளி, இப்பயன் குறித்து, மாந்தரை ஆட்கொள்ளும் அருள்வெள்ளத்தினால், அம்மாந்தரின் உயிர் தூய பரவெளியில், சிவசோதியுடன், தானும் ஒளியாய் நின்று கலக்கும்.*

**பெருமை, சிறுமை அறிந்து, எம் பிரான் போல்**
**அருமை, எளிமை அறிந்து, அறிவார் ஆர்?**
**ஒருமையுள் ஆமைபோல், உள் ஐந்து அடக்கி**
**இருமையும் கெட்டு, இருந்தார் புரை அற்றே.**

*யோகிகள் தம்முடைய புலன்களை, ஆமை தன் உறுப்புகளை ஓட்டினுள் அடக்குவது போல, சிவத்தில் தோய்ந்த தமது உணர்வில் ஒன்றிடச் செய்து, இம்மை, மறுமைகளில் பெறுவன பற்றியும் கருத்தன்றி, மாசற்ற மனத்துடன் உள்ளனர். அவர்கள் வீடுபேறு பெறும் வண்ணம் இறைவன் அருள் செய்வான். ஏன்? அன்பரின் அன்பு, உறுதி – இவற்றின் சிறுமை, பெருமைகளை அறிந்து, அவற்றுக்கு ஏற்ப, முறையே காட்சிக்கு அரியவன் ஆகவும், எளியவனாகவும் நின்று, அவருக்கு என வழங்கவேண்டிய வரத்தை அறிபவன், எம் பெருமானைப் போல வேறு யார்?*

**Advertisement**


## மகாமந்திரம்



அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அணுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

BNS

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

Wings of Wisdom

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

HABITUAL READER

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 | VALASARAVAKKAM 42105700 | PORUR 42107304 | OMR 42863478 | VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

# அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும்ஓர் 27**
**அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி 28**

*அகரம் முதல் ஔகாரம் வரை உயிரெழுத்துக்கள் பன்னிரண்டையும் முதலாகக் கொண்டு இதுகாறும் இவ்வாறு உரைத்துவந்த பெருமான், இனி, பலவாய வெளிகளையும் கூறுவான் தொடங்கி, திருநிலைத் தனிவெளி முதலாகப் பல்வேறு வெளிநிலை அனுபவங்களையும் தொடர்ந்து அடுக்கடுக்காகக் கூறிச் செல்கிறார்.*

*திருநிலைத்தனிவெளி எனத்தொடங்கும் இவ் ஈரடிகளில், தனிவெளி, சிவவெளி, அருள்வெளி என மூன்று வெளிகள் கூறப்பெறுகின்றன.*

*'அ' முதல் ஔ வரை உள்ள பன்னிரண்டு உயிரனுபவ நிலைகளைக் கடந்தால் மேல்வரும் அருளனுபவம் பதின்மூன்றாம் நிலை. அது தனிநிலை. உயிரெழுத்துப் பன்னிரண்டை அடுத்துப் பதின்மூன்றாவது எழுத்து ஆய்த எழுத்து (ஃ), அஃகேனம். அஃகேனத்திற்கு (ஆய்த எழுத்திற்கு)த் தனிநிலை என்றும் ஒரு பெயருண்டு. இந்நிலையே தனிநிலைத் திருவெளி. திருநிலைத் தனிவெளி. அதுவே சிவவெளி. அதுவே அருள்வெளி. இத்திருநிலைத்தனிவெளி சிவவெளி அருள்வெளியாம் பதியில் வளருகின்ற அருட்பெருஞ்ஜோதி.*

*திருநிலைத் தனிவெளி – சிவவெளி – அருள்வெளி*

*பிண்டத்தில் வலக்கண் இடக்கண் நெற்றிக்கண் (புருவமத்தி) ஆகியனவே அண்டத்தில் சிற்சபை பொற்சபை ஞானசபைகளாகக் காட்டப்பெற்றன.*

**திருநிலைத் தனிவெளி சிவவெளி எனும்ஓர்**
**அருள்வெளிப் பதிவளர் அருட்பெருஞ்ஜோதி (27 – 28)**

*என்று இங்கு கூறப்பெற்ற திருநிலையானது அருட்பெருஞ்ஜோதி அகவலில் பின்னோரிடத்தும்*

**ஒருநிலை இதுவே உயர்நிலை எனும்ஒரு**
**திருநிலை மேவிய சிவமே சிவமே (949 – 50)** *எனக் கூறப்பெறுகிறது.*

**திருநிலை பெற்றனன் அம்பலத் தான்அருள் தெள்ளமுதுண்(டு)**
**உருநிலை பெற்றனன் ஒன்றே சிவமென ஓங்குகின்ற**
**பெருநிலை பெற்றனன் சுத்தசன்மார்க்கம் பிடித்துநின்றேன்**
**இருநிலை முந்நிலை எல்லா நிலையும் எனக் களவே. – 4677**

**திருநி லைத்துநல் அருளொடும் அன்பொடும் சிறப்பொடும் செழித்தோங்க**
**உருநி லைத்திவண் மகிழ்வொடு வாழ்வுற உவந்துநின் அருள் செய்வாய்**
**இருநி லத்தவர் இன்புறத் திருவருள் இயல்வடி வொடுமன்றில்**
**குருநி லைத்தசற் குருஎனும் இறைவநின் குரைகழற் பதம்போற்றி**

*என்ற திருவருட்பாக்களில் வரும் திருநிலைகளைக் கண்டு தெளிய*

வேண்டும். திருநிலை பெறவேண்டும். திரு, நிலை பெறவேண்டும். திரு நிலைக்கவேண்டும்.

தமிழில் திரு என்பதும் வடமொழியில் 'ஸ்ரீ' என்பதும் பெரும்பதங்கள். பெரியவற்றுளெல்லாம் பெரியது திருவே. திருவுக்குமேல் பெரியது வேறெதுவுமில்லை. அப்படியே 'ஸ்ரீ' யும்.

| | | |
|---|---|---|
| திருநிலைத்தனிவெளி | – | புருவமத்திய வெளி |
| சிவவெளி | – | சிற்றம்பலவெளி |
| எனும்ஓர் | – | என்னும்ஒரு |
| அருள்வெளிப்பதி | – | அருள்வெளிப்பதியினிடத்தில் |
| வளர் | – | வளரொளியாக விளங்கும் |
| அருட்பெருஞ்ஜோதி | – | அருட்பெருஞ்ஜோதி |

புருவமத்தியே சிற்றம்பலம், ஞானசபை என்பார் வள்ளற்பெருமான், புருவமத்தியவெளியென்றும் சிற்றம்பலமென்றும் சொல்லப் பெறுகின்ற அருள்வெளிப்பதியாகிய சத்தியஞானசபையில் வளரொளியாக விளங்கும் அருட்பெருஞ்ஜோதியே என்றவாறு.

அருள்வெளிப்பதி என்பதில் பதி என்பது ஊர், தலம். அருள்வெளி – சத்தியஞானசபை; ஞானசபைப்பெருவெளி. பதி, உத்தரஞானசிதம்பரமாகிய வடலூரர்.

**உபய பக்கங்களும் ஒன்று எனக் காட்டிய 77**
**அபய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி 78**

| | | |
|---|---|---|
| உபயம் | – | இரண்டு |
| உபயபக்கங்கள் | – | இருபக்கங்கள் |

தத்துவ உலகில் அணுபட்சம், சம்புபட்சம் (அணுபக்கம், சம்புபக்கம்) என இரு பக்கங்கள் கூறப்பெறும். வள்ளற் பெருமானும் சிலவிடங்களிற் கூறுகின்றார். ஈண்டு இவ்வகவல் வரிகளுக்கு அவை பொருந்துமாறில்லை.

சமய உலகில் சுபக்கம் பரபக்கம் என இருபக்கங்கள் பேசப்பெறும். சுபக்கம் (சு–பக்கம்) தன்பக்கம். பரபக்கம் (பர–பக்கம்) பிறர் பக்கம். சைவ சந்தானகுரவர் அருணந்திசிவனார் தாம் அருளிச்செய்த சிவஞானசித்தியார் நூலைப் பரபக்கம், சுபக்கம் என இருபகுதிகளாகச் செய்துள்ளார். பரபக்கம் – பிறரதுபக்கம். சுபக்கம் – தன்பக்கம். பரபக்கத்தில் பிற சமயக் கொள்கைகளை மறுக்கிறார். சுபக்கத்தில் தம் சமயக் கொள்கையை நிறுவுகிறார்.

'உபய பக்கங்களும் ஒன்று என்று' இங்கு வள்ளற் பெருமான் கூறுவது சுபக்கம் பரபக்கம் எனும் இரு பக்கங்களுக்கும் பொருந்துகிறது. சுபக்கம், பரபக்கம் – தன்பக்கம், பிறர் பக்கம் ஆகிய இருபக்கங்களிலும் உண்மை ஒன்றே. அதைப் பலரும் பலவாறு காண்கின்றனர். ஏகம்சத் விப்ரா பகுதா வதந்தி என்று வேதாந்த உலகில் வழங்கும் ஒரு மொழி உண்டு. உண்மை ஒன்றே, உலகம் பலவிதமாக அதைக் காண்கிறது

என்று பொருள். தன்பக்கத்தையும் பிறர்பக்கத்தையும் விருப்பு, வெறுப்பின்றி பொதுவாக உண்மையைகாண வேண்டும் என்பது வள்ளற்பெருமான் கருத்தாகலாம்.

பொதுவாக எல்லாப் பொருள்களுக்கும் அகம், புறம்; முன், பின்; மேல், கீழ்; (உட்பக்கம், வெளிப்பக்கம்; முன்பக்கம், பின்பக்கம்; மேற்பக்கம், கீழ்(அடி)ப்பக்கம் என இருபக்கங்கள் உண்டு.

அனுபவங்களில் நலம், தீங்கு (நல்லது, கெட்டது), புண்ணியம், பாவம், விருப்பு வெறுப்பு, இன்பம் துன்பம் என இருபக்கங்கள் உண்டு. இவ்விருபக்கங்களையும் - நிலைகளையும் - சமமாகக் காணுதல் ஒரு பெருநிலை. உபய பக்கங்களும் ஒன்றெனக் காணும் நிலை சமபாவம். விருப்பு வெறுப்பின்றி இன்பதுன்பம் இரண்டையும் சமமாகக் காணும் இச்சமபாவநிலை இறைவன் காட்டினாலன்றி, நாமாக நம் ஆன்மபோதத்தாற் காண்பது அரிதாகும். ஆகவே உபய பக்கங்களும் ஒன்றெனக் காட்டிய அபய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி என்றார்.

அபயம் - அடைக்கலம்; சரணாகதி

அ + பயம்= பயமற்றது, பயம் நீங்கியது, பயத்தை நீக்குவது.

அபயம் அளிப்பது சிற்சபை, ஆதலின் அபய சிற்சபையில் அருட்பெருஞ்ஜோதி என்றருளினார்.

அபயம் அபயம் அபயம் என்று வள்ளற்பெருமான் பாடிய பதிகமே ஒன்று உண்டு

**அருட்பெருஞ் சோதி அபயம் அபயம்**
**பொருட்பெருஞ் சோதிப் புணைதந்(து) – இருட்பெருங்கார்**
**அள்ளற் கடல்கடத்தி அக்கரைமேல் ஆனந்தம்**
**கொள்ளற் கபயங் கொடு.** என்பது பெருமான் அபயம் வேண்டுவது.

**அருட்பெருஞ் சோதி அபயம் அபயம்**
**அருட்பெருஞ் சோதி அபயம் – அருட்பெருஞ்**
**சோதிஅபயம் சிற் சோதி அபயம்பொற்**
**சோதிஅபயம் துணை.**

என்பது, அருட்பெருஞ்ஜோதி அபயம் அபயம் என மும்முறை சாற்றி, சிற்சோதி அபயம் பொற்சோதி அபயம் துணை என முடித்தது.

சிற்சபைச்சோதி **சிற்சோதி,** பொற்சபைச்சோதி **பொற்சோதி.** ஞானசபைஜோதி **அருட்பெருஞ்ஜோதி.**

திருச்சிற்றம்பலம்

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

# சமாதி வற்புறுத்தல்

இறந்தவர்களைப் புதைக்க வேண்டும், எரிக்கக் கூடாது என்பது வள்ளற்பெருமானின் கண்டிப்பான கட்டளை. இதனைத் திருவருட்பாவில் சமாதி வற்புறுத்தல் என்ற தலைப்பிற் காணலாம். உபதேசங்களிலும் திருமுகங்களிலும் காணலாம். புலால் மறுத்தல், சமாதி வறுபுறுத்தல் ஆகிய இரண்டிலும் வள்ளலார் மிகவும் கண்டிப்பாக இருக்கிறார். சமாதானத்திற்கு இடமே வைக்கவில்லை. கண்டிப்பு என்றால் கண்டிப்புதான். பிணத்தை எரிப்பது கொலை என்கிறார். அந்த அளவுக்கு எரித்தலைக் கண்டிக்கிறார். சன்மார்க்க உலகில் சுடுகாட்டுக்கு இடமில்லை. திருவருளை முழுவதுமாய் பெறாதவர்களுக்கு இடுகாட்டுக்கு மட்டுமே இடமுண்டு.

திருமூலரும் தம் திருமந்திரத்தில் "சமாதிக் கிரியை" என்றொரு அதிகாரமே பாடியுள்ளார். பதிமூன்று மந்திரங்கள். ஞானிகள் இறந்தால் அவர்களது உடலை எரிக்கக் கூடாது, சமாதி செய்யவேண்டும் என்று சில பாடல்கள் வற்புறுத்துகின்றன. எப்படிச் சமாதி வைக்க வேண்டும் என்று சமாதிக்கிரியையிலுள்ள சில பாடல்கள் விவரிக்கின்றன.

**புண்ணிய மாம்அவர் தம்மைப் புதைப்பது**
**நண்ணி அனல் கோக்கில் நாட்டில் அழிவாகும்**
**மண்ணில் அழியில் அலங்கார பங்கமாம்**
**மண்ணுல கெல்லாம் மயங்கும் அனல் மண்டியே. – திருமந்திரம்**

இறந்த ஞானியர்களை புதைப்பது புண்ணியம், எரித்தால் நாட்டில் அழிவு ஏற்படும். சரியாகச் சமாதி செய்யாமல் மண்ணில் அழியவிட்டால் நாட்டில் பொலிவு குன்றும். மண்ணுலகெல்லாம் அனல் மண்டி மயங்கும்.

ஞானியின் உடம்பை எரித்தால் அது கோயிலை எரிப்பது போல என்கிறார் திருமூலர். நாட்டில் தீ விபத்துகள் ஏற்படும், மழை பெய்யாது, போர்வரும், பஞ்சம் உண்டாகும், மன்னர்கள் ஆட்சியை இழப்பர் என்கிறார். எரிப்பதால் உண்டாகும் உற்பாதங்கள் எத்தனை எத்தனையோ? புதைப்பது புண்ணியம் என்கிறார்.

வள்ளலாரது சமாதி வற்புறுத்தலுக்கும் திருமூலரின் சமாதிக் கிரியைக்கும் ஒரே ஒரு வேறுபாடு. ஆயினும் முக்கிய வேறுபாடு. இறந்த எல்லாரையுமே புதைக்க வேண்டும் எரிக்கக்கூடாது என்கிறார் வள்ளலார். இறந்த ஞானியர்களை (துறவிகளை) புதைக்க வேண்டும் எரிக்கக் கூடாது என்கிறார் திருமூலர். இறந்தாரைப்பற்றி, பொது மக்களைப் பற்றிச் சொல்லவில்லை.

நாம் உயிர் நீங்கிய உடலைப் புதைக்கிறோம், அல்லது

*எரிக்கிறோம். எரிக்கக்கூடாது, புதைக்கவேண்டு மென்பதே வள்ளற் பெருமானின்கொள்கை. 'இனிச் சாகும் பிணங்களே' என்றும், 'கண்கெட்ட மாட்டினீரே' என்றும், 'இழுதையீரே' என்றும் எரிப்பவரைச் சாடுகின்றார். 'பரன் அளிக்கும் தேகம் இது சுடுவது அபராதம், சுட்டால் அது தான் கொலை' எனக் கூறுகின்றார்.*

**குணம் புதைக்க உயிரடக்கம் கொண்டதுசுட்**
**டால்அதுதான் கொலையாம் என்றே**
**வணம்புதைக்க வேண்டும்என வாய்தடிக்கச்**
**சொல்கின்றேன் வார்த்தை கேட்டும்**
**பிணம்புதைக்கச் சம்மதியீர் பணம்புதைக்க**
**சம்மதிக்கும் பேய ரேநீர்**
**எணம்புதைக்கத் துயில்வார்நும் பாற்றுயிலற்கு**
**அஞ்சுவரே இழுதை யீரே – திருஅருட்பா**

*பிணத்தைப் புதைப்பது எரிப்பது இவ்விரண்டுமே உலகெங்கும் உள்ள பழக்கம். இரண்டைப் பற்றிய குறிப்புகளும் சங்க நூல்களில் உள்ளன. இரண்டுமே பழமையானதேனும் புதைப்பதே மிகப் பழமையானது. மிகப் பழங்காலத்தில் உலகெங்கும் புதைக்கும் வழக்கமே இருந்தது. பின்னாளில் தான் எரிக்கும் வழக்கம் வந்தது. நமக்கோ இடுகாடு சுடுகாடு இரண்டும் உள்ளது. நம்மிலும் துறவிகள் இறந்தால் புதைக்கிறோம். சுமங்கலிகள் இறந்தால் புதைக்கிறோம். அம்மைநோயால் இறந்தவர்களைப் புதைக்கிறோம். ஆயினும் புதைப்பது சிறுபான்மையாகவே இருக்கிறது. எரிப்பதே பெரும்பான்மையாக உள்ளது. இறந்த பின் எப்படிச் செய்தாலென்ன எனச் சிலர் அமைதியடைகின்றனர். சிலர் வழக்கங்களைப் பின்பற்றுகின்றனர். நீண்ட நாள் பழக்கம் வழக்கம் சந்தர்ப்பம் சூழ்நிலை இவற்றைவிட்டுக் கொள்கை என்ற அளவில் இனி ஆராய்வோம்.*

*வள்ளற் பெருமான் இக்கொள்கையை பொதுவாக அனைவர்க்கும் கூறியதோடமையாது தருமச்சாலை சம்பந்தமுடையவர்களுக்குக் கட்டளை யொன்றை எழுதியும் இதனை வற்புறுத்தி யுள்ளார். சாலை சம்பந்திகளுக்கு இட்ட சமாதிக் கட்டளை என அது வழங்குகிறது. பிணத்தைச் சுடக்கூடாதென்பதற்குப் பெருமான் கூறும் காரணம் மூன்று. 1. இது பரன் அளிக்கும் தேகம், சுடுவது அபராதம். 2. சுட்டால் அதுதான் கொலையாம். 3. இறந்தவர்கள் திரும்பவும் எழுந்து வருவார்கள். சுடுவது அபராதம் என்பது ஒருவாறு விளங்குகிறது. பிணத்தைச் சுடுவது எங்ஙனம் கொலை ஆகும் என்பது தெளிவாக விளங்கவில்லை. இறந்தவர்கள் எல்லாரும் திரும்ப எழுந்து வருவார்கள் என்பதும் தெளிவாக விளங்கவில்லை. உயிரோடு*

இருப்பவரை எரிப்பின் அது கொலையாகும். பிணத்தைச் சுடுவது கொலையாதல் எங்ஙனம்? விளக்கம் வேண்டுமன்றோ? ஒருவாறு விளங்கிக் கொள்ள முயல்வோம்.

உடம்பு 96 தத்துவங்களால் ஆனது (தத்துவம்36 + தாத்துவிகம் 60). பூதம்5, ஞானேந்திரியம் 5, தன்மாத்திரை 5, கன்மேந்திரியம் 5, அந்தக்கரணம் 4, ஆக ஆன்ம தத்துவம் 24; வித்தியா தத்துவம் 7,சுத்த தத்துவம் 5, ஆகத் தத்துவம்(உட்கருவிகள்)36.

பிருதிவியின் கூறு5, அப்புவின் கூறு5, தேயுவின் கூறு5, வாயுவின் கூறு5, ஆகாயத்தின் கூறு5, நாடிகள்10, வாயுக்கள்10, அகங்காரம் 3, வாக்காதியின் வழி தொழில்5, குணம்3, வாக்கு4, ஆகத் தாத்துவிகம் (புறக்கருவிகள்) 60. ஆகத் தத்துவங்கள் 36+60=96.

தத்துவம் 96 இல் புறக்கருவி 60 இல் வாயுக்கள் 10 எனப் பார்த்தோம். அவை: 1. பிராணன், 2. அபானன், 3. உதானன், 4. வியானன், 5. சமானன், 6. நாகன், 7. கூர்மன், 8. கிரிகரன், 9. தேவதத்தன், 10. தனஞ்செயன். இவை தசவாயுக்கள் எனப்படும். தசவாயுக்களின் தொழில் பின்வருமாறு:

1. பிராணன்: மூலாதாரத்தில் தோன்றி இடைகலை பிங்கலையாக ஏறிக் கபாலத்தளவுஞ் சென்று நாசியில் 12 அங்குலம் புறப்பட்டு, 4 அங்குலம் வெளியே போய், 8 அங்குலம் உள்ளே அடங்கும். இவ்வாறு ஒரு நாளைக்கு 21600 சுவாசம் நடக்கும். இதில் 72,000 வெளியே செல்லும், 14400 உள்ளே அடங்கும்.

2. அபானன்: குதத்தில் நின்று மல சலங்களைக் கழிப்பிக்கும்.

3. உதானன்: விக்கல், இருமல் செய்யும்.

4. வியானன்: உண்ட உணவின் சாரத்தை 72000 நாடிகளிலும் கலப்பிக்கும்.

5. சமானன்: எல்லாவற்றையும் சமன் செய்யும்.

6. நாகன்: இருமல் தும்மல் உண்டாக்கும்.

7. கூர்மன்: கண்ணேற்றல் செய்யும்.

8. கிரிகரன்: சோம்பல், கொட்டாவி உண்டாக்கும்.

9. தேவதத்தன்: இமைத்தல் நகைத்தல்களைச் செய்யும்.

10. தனஞ்செயன்: உடம்பை வீங்கவும் விரியவும் செய்து உயிர் நீங்கிய காலத்தில் கபாலத்தைப் பிளந்து செல்லும்.

பத்து வாயுக்களுள் முதல் வாயுவான பிராணன் அடங்கியவுடன் உடம்பு பிணமாகிறது. தனஞ்செயன் தவிர மற்ற தத்துவங்களும் அடங்கிவிடுகின்றன. தனங்செயன் மட்டும் உயிர்நீங்கிய உடம்பினுள் மூன்றுநாள் வரை இருக்கும். உடம்பை வீங்கவும் விரியவும் செய்யும். உயிர்போன பின்னும் பிணம் வீங்கக் காண்கிறோம். விரியக் காண்கிறோம். வீங்கச் செய்வதும் விரிய

செய்வதும் இத்தனஞ்செயனே. இப்படி மூன்றுநாள் இருந்து மூன்றாநாள் மண்டையை நெல் அளவு பிளந்துகொண்டு தனஞ்செயன் வெளியேறும். உயிர் நீங்கிய உடம்பில் 95 தத்துவங்கள் தொழிற்படாவிடினும் தனஞ்செயனாகிய ஒரு தத்துவம் மட்டும் தொழிற்பட்டுக் கொண்டிருக்கிறது. அது மூன்று நாள் வரை தொழிற்படும். அதன்மேல் அதுவும் தொழிற்படாது. மூன்றாம்நாள் கபாலத்தைப் பிளந்து வெளியேறும்.

பிணத்தைச் சுடும்போது உடல் நாசமாகி உள்ளிருக்கும் தனஞ்செயன் வலிய வெளியேற்றப்படுகிறது. 'சிரம் நெளிக்கச் சுடு கின்றீர்' என்று பெருமான் கூறியதன் கருத்து இதுவாகலாம். புதைக்கப்படின் அது தானாக வெளியேறும். சுடுவதனால் நம்மையறியாது நாமே அதனை வெளியேற்றியவர்களாகிறோம். இதனால்தான் சுடுவது கொலையாகும் எனப் பெருமான் கூறினர் போலும். மூன்று நாளுக்குப் பின் சுடுவோமென்றால் மூன்று நாள் வரை வைத்திருக்க இயலாதன்றோ?

புதைப்பது நன்றா? எரிப்பது நன்றா? என்ற வினா மேலை நாடுகளிலும் உள்ளது. அறிஞர்களும் ஆராய்ச்சியாளர்களும் இதைப்பற்றித் தீராத விவாதஞ் செய்துகொண்டிருக்க, தத்துவ ஞானியாகிய நமது பெருமான் புதைக்க வேண்டுமென்று கட்டளையிட்டுள்ளார். பெருமானின் கட்டளையை அப்படியே ஏற்றுக் கடைப்பிடிக்க வேண்டுமேயொழிய ஆராய்ந்து ஏற்போம் என்பது சரியாகாது. ஏனெனில், ஆராய்வதற்கு ஏற்ற அறிவு நமக்கில்லை. முற்றறிவினராகிய பெருமானது வாக்கெல்லாம் பதிவாக்குகளே யாகும்.

திருச்சிற்றம்பலம்

## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் பற்றி அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினை காண்க.

**மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் 8012680865**

# பாடலும் பொருளும்

அந்தரமிங் கறிவோமற் றதனி லண்டம்
அடுக்கடுக்கா யமைந்தவுள வறிவோ மாங்கே
உந்துறும்பல் பிண்டநிலை யறிவோஞ் சீவன்
உற்றநிலை யறிவோமற் றனைத்து நாட்டும்
எந்தைநின தருள்விளையாட் டந்தோ வந்தோ
எவ்வளவு மறிந்திலோ மென்னே யென்று
முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற
முழுமுதலே யன்பர்குறை முடிக்குந் தேவே – மகாதேவமாலை(62)

அந்தரம் என்பது ஆகாயம் அல்லது வெளி. எங்கும் நிறைந்து விளங்குகின்ற அந்தப் பெருவெளியிலே அண்டங்கள் எத்தனையோ கோடி ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கடுக்காய் அமைந்துள்ளதென்பது அனைவரும் அறிந்துள்ளதே. கதிரவன் மத்தியில் இருக்க அந்தக் கதிரவனைச் சுற்றிப் பல கோள்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. கதிரவனுக்கும் அந்தக் கோள்களுக்கும் உள்ள இடைவெளியோ பல லட்சக் கணக்கான, பலகோடிக் கணக்கான கிலோ மீட்டர் ஆகும். இவை அனைத்தும் சேர்ந்தது ஓர் அண்டமாகும். இவ்வாறு அமைந்துள்ள அண்டங்கள் கோடிக்கணக்கானவை இந்தப் பெருவெளியில் உள்ளன. நடராசபதி மாலையில் அண்டங்களின் அமைப்பை அழகு படக் கூறியுள்ளார்.

ஒருபிரமன் அண்டங்கள் அடிமுடிப் பெருமையே
உன்னமுடியா அவற்றின்
ஓராயிரங்கோடி மால் அண்டம் அரன்அண்டம்
உற்ற கோடாகோடியே
திருகலறுபலகோடி ஈசன் அண்டம்சதா
சிவ அண்டம் எண்ணிறந்த
திகழ்கின்ற மற்றைப் பெருஞ்சத்தி சத்தர் தம்
சீரண்டம் என் புகலுவேன்
உருவுறும் இவ்வண்டங்கள் அத்தனையும் அருள்வெளியில்
உறுசிறு அணுக்களாக
ஊடசைய அவ்வெளியில் நடுநன்று நடனமிடும்
ஒருபெருங்கருணை அரசே
மருவிஎனை ஆட்கொண்டு மகனாக்கி அழியா
வரந்தந்த மெய்த்தந்தையே
மணிமன்றின் நடுநின்ற ஒரு தெய்வமேஎலாம்
வல்லநடராச பதியே.

கோடிக்கணக்கான இவ்வண்டங்கள் அனைத்தும் அடுக்கடுக்காய் அமைந்துள்ள உளவை அறிவோம். இந்த அண்டங்களில் செலுத்தப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கின்ற பலவகையான உடல் அமைப்பு கொண்ட ஜீவன்களையும் அறிவோம். ஊர்வன, பறப்பன, உறுவன, நடப்பன என நான்கு வகையாகப் பிறவிகளைப் பிரிப்பதுண்டு. அல்லது அசையும் உயிர்கள் என்றும் அசையா உயிர்கள் என்றும் இரு வகையாகப் பிரிப்பதுண்டு. இவை அனைத்தையும் விட ஓரறிவு முதல் ஐந்தறிவுவரை உள்ள ஜீவன்கள் என்றும் ஆறறிவுள்ள மனிதர் என்றும் பிரிக்கலாம். எவ்வாறாயினும் எல்லாவகைப் பிண்டங்களிலும் உயிர்களைச் செலுத்தியுள்ள வகையையும் அறிவோம்.

மற்றபடி ஜடப் பொருட்களாகிய நிலம் நீர் காற்று நெருப்பு போன்ற பல வகையான அறிவற்ற ஜடப் பொருட்களையும் மற்ற எல்லாவற்றையும் தன் விருப்பம் போல் ஆட்டி வைக்கின்ற இறைவனுடைய அருள் விளையாட்டை எள்ளளவும் அறிய முடியவில்லையே என்று முதல் நூலாகிய வேதங்களே போற்றுகின்றனவாம். மனித சக்திக்கு மீறிய அனைத்தும் இறைவன் செயலே. இந்தப் பூமி தன்னைத் தானே சுற்றாவிடில் இரவு பகல் ஏற்படாது. மணிக்கு 1500 கி.மீ. வேகத்தில் பூமி சுற்றுவதாகக் கணக்குக் காட்டியுள்ளார்கள். 50 அல்லது 60 கி.மீ. வேகத்தில் செல்லும் பேருந்து ஒன்றில் நின்றால் தள்ளாடுகிறோம். ஆனால் ஒரு மணிக்கு 1500 கி.மீ. வேகத்தில் சுற்றும் பூமியின் மீதே நாம் இருக்கிறோம். இந்தப் பூமி சுற்றுவதே நமக்குத் தெரியவில்லை. அவ்வளவு வேகமாகச் சுற்றிக் கொண்டிருக்கும் பூமியின் மீது இருக்கும் நாம் தூக்கி எறியப்படாமல் இருப்பது அதைவிடப் பேராச்சரியம். பருவ காலமறிந்து மழை பெய்வதும் இன்றும் பற்பல இயற்கையின் அற்புதச் செயல்களும் நாம் ஊன்றிக் கவனித்தால் இறைவனது அருள் விளையாட்டை முழுமையாக அறிய முடியுமா எனில் ஓர் எள் அளவு கூட அறிய முடியவில்லை என்று வேதங்கள் அலறி ஓலமிடுவதில் என்ன தவறு? இறைவனது அருள் விளையாட்டை யாராலும் அறிய முடியாது. கூர்த்த அறிவு கொண்டு ஆழ்ந்து சிந்தித்தால் மட்டுமே அருள் விளையாட்டு நிகழ்ந்து கொண்டிருக்கும் அற்புதத்தை உணரமுடியும். இவ்வாறு நிகழ்த்தும் அந்த இறைவன் ஒருவனே முழுமுதற் கடவுளாவான். அவன் ஒருவனே அன்பர்களின் குறைகள் அனைத்தினையும் தீர்த்து வைப்பவன். எங்கே மெய்யன்பர் உளர், அங்கே நலந்தர எழுந்தருளும் வண்மைப்பதம். எவ்வண்ணம் வேண்டுகினும் அவ்வண்ணம் அன்றே இரங்கி ஈந்தருளும் பதம். ஈறிலாப்பதம், எலாந்தரும் திருப்பதம் அழிவில்லாத இன்பத்தைத் தரும் பதம், அவனது திருப்பதமே.

# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்

அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம். **தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.**

## ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை

| | |
|---|---|
| காலை உணவிற்கு | - ரூ.2,500/- |
| மதிய உணவிற்கு | - ரூ.6,500/- |
| இரவு உணவிற்கு | - ரூ.3,500/- |
| பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு | - ரூ.4,000/- |
| பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு) | - ரூ.2,500/- |
| அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு) | - 15 லிட்டர் |

**தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்**

**Please donate - Cheque / DD In favour of**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**Please donate through:**

**HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**Please send MO to:**

அருள்திரு **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,

கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,

திருஅண்ணாமலை - 606 604.

செல்: +91 9443489849, +91 9942776351

அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# அருள் பூரண சித்தி யோகம்

ஈரோட்டில்

ஒரு நாள் தியான முகாம்...

நாள்:
**ஜுலை 23**
ஞாயிற்றுக்கிழமை



இன்புறலாம் எவ்வுலகும் ஏத்திட வாழ்ந்திடலாம்
எல்லாம்செய் வல்லசித்தி இறைமையும்
பெற்றிடலாம் அன்புடையீர் வம்மின் இங்கே...

தியானம், யோகம், சத்சங்கம்,
ஜீவகாருண்யம், பக்தி...

தன்னையறிந்து இன்பமுறு...

இவற்றில் மூழ்கி திளைத்திட ஓர் அரிய வாய்ப்பு

நேரம்: காலை **6:30** மணி முதல் இரவு **7:00** மணி வரை

## இடம்: பிளாட்டினம் மஹால் A/C,

165, பவானி மெயின் ரோடு, R.N.புதூர், **ஈரோடு – 638 005.**

**முன்பதிவு அவசியம்: 75020 26565, 98652 29035.**

**இப்பயிற்சியில் உள்ளூர் & வெளியூர் அன்பர்களும் கலந்துகொள்ளலாம்**
**பயிற்சியில் ஒரு நாள் முழுவதும் அவசியம் கலந்துகொள்ளவேண்டும்**

நிகழ்ச்சி அமைப்பு:
அருட்பெருஞ்ஜோதி வள்ளலார் அறக்கட்டளை, *திருவண்ணாமலை.*

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly July 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).


அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி

தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.



நாள்: 30-07-2017, ஞாயிற்றுக் கிழமை

இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.

- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- ஜோதி தியானம்
- திருவருட்பா இசைக் கச்சேரி
- ஜோதி வழிபாடு

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: 75020 26565, 99651 50531


திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865